**சி.பி.எண்.3/2026** **10.08.2026**

**மனுதாரர்.த.சாட்சி. 1 திரு.ராமதிலகம் குறுக்கு விசாரணை**

தொழிற்தகராறு மனு எண்.12/2005 இந்நீதிமன்றம் பிறப்பித்த தீர்வத்தில் பின்சம்ளம் மற்றும் இதர சலுகைகள் எனக்கு கிடைக்கக்கூடியவை அல்ல என்று இந்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்றால் சரிதான். இந்த உத்தரவினை எதிரித்து நானும் ரிட் மனு தாக்கல் செய்தேன். நிர்வாகமும் ரிட் மனு தாக்கல் செய்தது என்றால் சரிதான். இரண்டு மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன என்றால் சரிதான். அந்த உத்தரவினை எதிர்த்து நிர்வாகம் ரிட் மேல்முறையீட்டு மனு எண்.296/2026 என்ற மனுவை தாக்கல் செய்து அது தற்போது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் ரிட் மேல்முறையிடு மனு தாக்கல் செய்ததாக என்னிடம் கூறியுள்ளார். இந்த மனுவுடன் நான் எனக்கு சேர வேண்டிய தொகைகள் குறித்து கணக்கீட்டு பட்டியல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த கணக்கீட்டு பட்டியலை நான் 18(1) ஒப்பந்தத்தின் அடிப்படையில் கணக்கிட்டுள்ளேன். அந்த ஒப்பந்தமானது நிர்வாகத்திற்கும் யுனியனுக்கும் இடையே ஏற்பட்டது. யுனியனின் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. 2019ம் ஆண்டு தொழிற்தகராறு மனுவில் தீர்வம் பிறப்பிக்கப்பட்ட பின்பு நான் அந்த யுனியனில் உறுப்பினராக இல்லை. ஒப்பந்தமானது 2005, 2009, 2013, 2017, 2021 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளில் ஒப்பந்தம் போடப்பட்டது. இந்த கணக்கீட்டு தொகைகளை தீர்ப்பு வழங்கிய காலக்கட்டமான 2019க்கு பின்னிட்டு தான் கணக்கிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடன் பணிபுரிந்த மற்ற தொழிலாளிகள் வாய்மொழியாக கூறியதன் அடிப்படையில் பணப்பலன்களை கணக்கிட்டுள்ளேன். மற்ற தொழிலாளிகளின் சம்பள ரசீது நகல்களை நான் தாக்கல் செய்யவில்லை. யாருடைய சம்பள தொகையை நான் ஒப்பிட்டேன் என்பதைக் காட்டுவதற்கு அவருடைய விவரங்கள் எதையும் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் நான் கூறவில்லை என்றால் சரிதான். அவரின் பணியில் சேர்ந்த தேதி அவருடைய பணிநிலை ஆகிய விவரங்களை மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். வேலை செய்யாத காலங்களில் போனஸ் மற்றும் விடுப்பு

சம்பளம் ஆகியவைகளை கோருவதற்கு எனக்கு அடிப்படை இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கணக்கீட்டு பட்டியலுக்கு எந்தவித ஆதாரமும் இல்லை தவறாக கணக்கிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.08.10 15:50:52 +0530

Presiding Officer,
Additional Labour Court, Vellore.